இதழ்

கருத்தரங்க மலர்

# தமிழ் இலக்கியத்தில் பண்பாட்டுப் பதிவுகள்

## பன்னாட்டுக் கருத்தரங்கம்

21 ஜனவரி, 2017

KGCAS



கருத்தரங்க ஏற்பாடு

தமிழ்த்துறை

All Rights Reserved.

Original English Language Edition © Copyright by **Coimbatore Institute of Information Technolo**

This book may not be duplicated in any way without the express written consent of the publisher, exc the form of brief excerpts or quotations for the purpose of review. The information contained herein the personal use of the reader and may not be incorporated in any commercial programs, other l database, or any kind of software without written consent of the publisher. Making copies of this book portion thereof for any purpose other than your own is a violation of copyright laws.

This edition has been published by **Coimbatore Institute of Information Technology, Coimbatore.**

**Limits of Liability/Disclaimer of Warranty:** The author and publisher have used their effort in pre this தமிழ் இலக்கியத்தில் பண்பாட்டுப் பதிவுகள் book and author makes no representation or warr with respect to accuracy or completeness of the contents of this book, and specifically disclaims any in warranties of merchantability or fitness for any particular purpose. There are no warranties which e beyond the descriptions contained in this paragraph. No warranty may be created or extended by representatives or written sales materials. Neither CiiT Software Research Institute nor author shall be for any loss of profit or any other commercial damage, including but limited to special, incid consequential, or other damages.

**Trademarks:** All brand names and product names used in this book are trademarks, registered trader or trade names of their respective holders.

ISBN 9781941505588

9 781941 505588

**ISBN 978-1-941505-58-8**
This Book is Printed in 70 gsm Papers.

கோயம்புத்தூர் தகவல் தொழில்நுட்ப நிறுவனம்,
156, காளிதாஸ் சாலை,
ராம்நகர், கோயம்புத்தூர் – 641009,
தொலைபேசி: 0422-4377821.

| வரிசை எண் | தலைப்புகள் |
|---|---|
| 1 | Elements of Tamil Culture Contributed to the World Civilization<br>*Dr. S. Kumaran* |
| 2 | பரணர் பாடல்களில் தலைவியின் பண்பாட்டுப் பதிவுகள்<br>*க. முருகேசன்* |
| 3 | பண்பின் மேன்மை போற்றும் கம்பனின் பாத்திரங்கள்<br>*ச. குருஞானாம்பிகா* |
| 4 | சிலப்பதிகாரத்தில் பண்பாட்டுக் கூறுகள்<br>*மு. கவிதா* |
| 5 | நீலகிரி குறும்பர்களின் பண்பாட்டுக் கலைகள்<br>*இரா. ஆனந்த்* |
| 6 | பயண இலக்கிய நோக்கில் ஆரிய திவ்வியதேச யாத்திரையின் பண்பாட்டுப் பதிவுகள் - பயணங்கள், பாதைகள், பதிவுகள்<br>*ச. பாரதிபிரகாஷ்* |
| 7 | பழந்தமிழும் தொல்பழங்குடிகளின் வழக்கும்<br>*செ.துரைமுருகன்* |
| 8 | தமிழரின் பண்பாட்டு அழகியல்<br>*சி. பொற்கை ஆதிரை* |
| 9 | காப்பும் படுகர்களும்<br>*கோ. சுனில்ஜோகி* |
| 10 | புறநானூற்றில் மனிதநேயம்<br>*ச. அனிதா சோபியா மார்கிரேட்* |
| 11 | ஆழ்வார்கள் வெளிப்படுத்திய பக்திநெறி<br>*சு. .சுகாசினி* |
| 12 | சங்க இலக்கியம் உணர்த்தும் சமூக வாழ்வு<br>*ந. உமாமகேஸ்வரி* |
| 13 | பண்பாட்டுப் பெட்டகம் திருக்குறள்<br>*அ. புஷ்பா* |
| 14 | தமிழர் பண்பாடும் சங்க எச்சங்களும்<br>*அ. ஹெப்சி ரோஸ் மேரி* |
| 15 | புணரியல் – சந்தி பரிச்சேதம் இயலமைப்பும் விளக்கமுறையும்<br>*த. சத்தியராஜ்* |
| 16 | பண்பாட்டு விழுமியங்கள்<br>*வெ. நிர்மலா* |
| 17 | தொகை நூல்களில் விருந்தோம்பல் பண்பு<br>*ஆ. சதீஸ்* |
| 18 | பெயரிடு பண்பாடு – திருநாவுக்கரசரை முன்வைத்து<br>*இரா. கோகுல்* |

# பரணர் பாடல்களில் தலைவியின் பண்பாட்டுப் பதிவுகள்

க. முருகேசன்

**முன்னுரை—**சங்க இலக்கியத்தில் மணிமகுடமாக விளங்கும் தலைவி தனிச்சிறப்புமிக்க அழகும் வனப்பும் உடையவளாக விளங்குகின்றாள். அதுமட்டுமின்றி மனித வாழ்வின் இரு நிலைகளான களவு, கற்பு ஆகியவற்றிற்குப் பொருந்தத்தக்க பாத்திரமாகக் காணப்படுகிறாள். அனைத்து நிலைகளிலும் தலைவியின் வாழ்வு சிறக்க வேண்டும் என்ற உயரிய நோக்கினைக் கொண்டே மற்ற பாத்திரங்கள் செயல்படுவதைப் பாடல்கள் உணர்த்துகின்றன. ஒழுக்கம் என்னும் உயரிய சொல்லே மனிதனை விலங்கிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றது. அத்தகைய சொல்லுக்கு இலக்கணமாகத் தகிழ்பவள் தலைவி என்பதாலேயே சங்க இலக்கியம் தலைவியைப் பெரிதும் உயர்த்துகின்றது.

நற்குடியில் பிறந்து குடிப்பிறப்பிற்குச் சற்றேனும் குறைவு தோன்றாமல் வளர்ந்து, குலக்கொடியாகத் தலைவனும் மரக்கிளையில் தளிர்விட்டுப் பரந்த களவு வாழ்விலும், கற்பாக மாறிய இல்லற வாழ்விலும் தனித்திறமைகளைத் தக்க வைத்துக் கொண்டுள்ள பாத்திரமாக வலம் வரும் தலைவியின் ஒழுகலாறுகள் பரணர் பாடல்களில் காட்சிப்படுத்தப் பட்டுள்ள பாங்கினைப் புலப்படுத்திக் காட்டுவதும், அவற்றின் வழி சங்க காலச் சமுதாயம் பண்பாட்டைக் கட்டிக்காப்பதில் கொண்டிருந்த பெருவிருப்பத்தையும் இக்கட்டுரை எடுத்துரைக்க முற்படுகின்றது.

### தலைவியின் தனித்தன்மைகள்

"தலைசான்ற கற்பும் தலைவிக்குரிய நாண், அச்சம், மடம், செறிவு, நிறைவு, செம்மை, செப்பு, அறிவு, அருமை, பொறை முதலிய பண்புகளும் கவிஞரேத்தும் கவின் பெறு வனப்பும் கொண்டவளாகத் தலைவி சித்தரிக்கப்படுகிறாள்" (நா.செயராமன், ஈன்ற தாய், ப.36)

### வருத்தம் கண்டு வருந்திய தோழியைத் தலைவி ஆற்றுவித்தல்

வரைபொருளின் பொருட்டுப் பிரிந்த தலைவனின் பிரிவுத்துயர் தாங்காது தலைவியின் மனமானது வருந்திக்கொண்டிருப்பினும் தன் உயிர் போன்றவளான தோழி வருந்தும்போது அவளைத் தேற்றும் உயரிய குணம் பெற்றவளாகத் தலைவி காணப்படுகின்றாள். பரணரின் குறிஞ்சித்திணைப் பாடலில் தலைவன் வரைபொருளின் பொருட்டுப் பிரிந்த காலத்தில் அப்பிரிவைத் தலைவி ஆற்றாளெனக் கவலையுற்ற தோழியை நோக்கித் தலைவி, தலைவர் பிரியேன் என்று சூளுரை செய்து இப்பொழுது பிரிந்துறையை, அதனால் உண்டான வருத்தத்தைப் பொறுத்துக்கொண்டு யான்இருப்பவும் நீ வருந்துதல் முறையன்று என்று உணர்த்துகின்றாள் இதனை,

**"துறுக லயலது மாணை மாக்கொடி**
**துஞ்சுகளி றிவருங் குன்ற நாடன்"**

(குறுந்., பா.36:1-2)

என்ற அடிகள் உணர்த்துகின்றன. தலைவனும் தலைவியும் பிரிந்திருக்கும் காலத்தில் தலைவியின் மனநிலை கண்டு வருந்திய தோழியிடம் தலைவி, "பருத்த கல்லின்மீது படரும் மாணையென்னும் கொடியானது அதன் பக்கத்தில் தூங்குகின்ற யானையினைக் கல் என்று தவறுலாகக் கருதி யானையின் மீதும் படரும், துயில் கலைந்து அவ்விடத்தை விட்டு யானை விலகிச் சென்றவுடன் படருவதற்குப் பற்றுக்கோடியின்றித் தவிக்கும், அத்தகைய மலை நாட்டின் தலைவன் எனது அழகிய தோள்களை அணைந்தபோது உன்னைப் பிரியேன் என்று உறுதிமொழி கூறிவிட்டுப் பிறகு பிரிந்து சென்று விட்டான். அதனால் உண்டான வருத்தத்தை நானே பொறுத்துக் கொண்டிருக்கும்போது தோழி நீ வருந்துதல் முறையன்று" என்று தன் துயரை மறைத்துத் தோழியை ஆற்றுவிப்பவளாகத் தலைவி இருக்கிறாள் என்பதனை பரணர் உணர்த்துகின்றார்.

தலைவனும், தலைவியும் ஒருவரோடு ஒருவர் அன்பு பாராட்டி மகிழும்போது தலைவியை எந்நிலையிலும் பிரியேன் என்று தலைவன் கூறுவதும் பிறகு ஏதேனும் ஒரு காரணம் கருதித் தலைவன், தலைவியைப் பிரிந்து செல்வதும் இதன் காரணமாக தலைவியின் உடலிலும் மனத்திலும் உண்டாகும் மாற்றத்தை உணர்ந்து, தோழி உள்ளம் கலங்குவதும் சங்கப் பாக்களில் பதிவாக்கப்பட்டுள்ளன. எனினும் அவ்வாறு கலங்கும் தோழிக்குத் தலைவியே ஆறுதல் கூறும் பாங்கினைக் காணும்போது தன் துயரினைப் பொருட்படுத்தாது பிறர் வருத்தத்தினைப் போக்க எண்ணும் தலைவியின் உயர்பண்பானது வெளிப்படுகின்றது.

மேலும் இப்பாடலில் தூங்குகின்ற யானையினை, உருண்டைக் கல்லெனக் கருதி அதன்மேல் படருகின்ற மாணைக் கொடியானது, துயில் கலைந்து அவ்விடத்தை விட்டு யானை விலகிச் சென்றவுடன் படருவதற்குப் பற்றுக்கோடியின்றித்

முனைவர் க. முருகேசன், தமிழ்த்துறைத்தலைவர், கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் - 641 029

ISBN 978-1-941505-58-8 © 2017 © கோயம்புத்தூர் தகவல் தொழில்நுட்ப நிறுவனம்